## தலைப்பு 130 – பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 27 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாட்பட்ட சிறுநீரக நோய்த்தடுப்பு மற்றும் ஆராய்ச்சி செயலக அலுவலகத்திற்கு கொடுக்கப்பட்டிருந்த அரச மனையின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு நிலுவையிலிருந்த வருமான மிகுதி ரூபா 2,580,000 ஆக இருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கான நிலுவை மிகுதியொன்று காட்டப்படாதிருந்ததுடன் அவ்வாண்டிற்குள் எவ்விதமான அறவிடுதலும் செய்யப்படவில்லை. அதனால் நிலுவை வருமானம் அந்த அளவிலிருந்து குறைவாக காட்டப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்திலிருந்து தள்ளுபடி செய்வதற்கு திறைசேரி அங்கீகாரம் பெறுதல் வேண்டியமை | இம்மனை ஒதுக்கப்பட்ட நாளிலிருந்தே வாடகைப் பணம் கொடுக்கப்படவில்லை. நிலுவை வாடகைப் பணம் சம்பந்தமான சிக்கலை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கும் படி அடிக்கடி சுகாதார அமைச்சினை வலுயுறுத்தப்பட்டும் நிலுவை வாடகைப் பணம் இதுவரை செலுத்தப்படவில்லை. |

### 1.6.2 காசுபாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வைப்புக் கணக்கின் ரூபா 11,710,791 வேறுபாட்டை | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய | காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது வைப்புக் |

| | | |
|---|---|---|
| நடவடிக்கை செயல்பாட்டிலிருந்து உண்டான பணமாக காசுப் பாய்ச்சலின் காட்ட வேண்டிய போதும், அதை நிதி செயல்பாட்டிலிருந்து உண்டான ஒரு காசுப்பாய்ச்சலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 267/2018 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்பட வேண்டியமை. | கணக்குகளின் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் வேறுபாட்டின் பெறுமதியை நிதி செயல்பாடுகளிலிருந்து உண்டான காசு பாய்ச்சல் கீழ் குறிப்பிடப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. |

### 1.6.3 முற்பணக் கணக்கு மீதி

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேவையிலிருந்து விலகிச் சென்ற 07 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 863,127 க்கான கடன் மிகுதியில் ரூபா 342,336 ஐந்து வருடங்கள் கடந்துள்ள கடனாகும். | அறவிடப்பட வேண்டிய கடன் மிகுதிகளை காலத்துக்குக் காலம் அறவிடப்படுதல் வேண்டியமை. | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. |

### 1.6.4 சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்கா சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

**அவதானிப்பு**

| சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை | | | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பிரிவு | பொது வீடுகள், அட்டவணைப்படுத்தப்பட்ட வீடுகள் ஒதுக்கிக் கொடுத்தல் சம்பந்தமான ஏற்பாடுகளிலிருந்து விலகி மற்றும் நீண்ட | ஒரு வீடு சம்பந்தமான அமைச்சரவைத் தீர்மானம் 27 வருடங்கள் பழமை வாய்ந்தமையாலும் | அமப/1991/116(70) கொண்ட 1991 ஒக்தோபர் 16 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக ஒரு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காத்திருப்புப் பட்டியலொன்று இருக்கையில் 2 சம்மேளன வீடுகள் முறையே ரூபா 275 மற்றும் ரூபா 1,000 மாதாந்த வாடகைக்கு இலங்கை நிர்வாக சேவை சங்கத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தன. | மற்றும் வீடுகள் அவ்வாறான தீர்மானத்திற்கு உட்படாமையினாலு ம் தாபனக் கோவை ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டியுள்ளமை. | வீட்டிற்கு ரூபா 275 பெயரளவிலான வாடகையும் அதே அமைச்சரவை தீர்மானத்தை கருத்தில் கொண்டு அப்போதிருந்த அமைச்சரவை செயலாளர் மற்ற வீட்டுக்காக 2001 பெப்ரவரி 02 ஆந் திகதி முதல் ரூபா 1,000 பெயரளவு வாடகையை அறவிடவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது . |
| (ii) | XIX அத்தியாயத்தி ன் 6.1 ஆம் பிரிவு | பதவிக்காக ஒதுக்கப்பட்ட வீடொன்றைத் தவிர ஏனைய சகல வீடுகளினதும் குத்தகைக் காலம் 5 வருடங்களுக்கு வரையறுக்கப்பட்டிருந்த போதிலும், 2004 வருடம் முதல் 2019 வருடம் வரை உத்தியோகத்தரொருவர் வசித்து வருகின்றார். | தாபனக் கோவையின் ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டியமை. | உயர்கல்வி அமைச்சின் பணிப்பாளர் ஒருவருக்கு 2004 ஆம் ஆண்டு முதல் 05 வருட காலத்திற்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், வீட்டைத் திரும்பவும் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படாமையால் இது சம்பந்தமாக சட்டமா அதிபரிடம் விசாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை | அமைச்சினுள் மனிதவள அபிவிருத்தி செய்வதற்கான மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் படி செயல்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாட்டிற்கமைய செயல்பட்டிருக்க வேண்டியமை. | அமைச்சுக்கான மனிதவள அபிவிருத்தி திட்டத்திற்கான வரைவை தயாரித்துள்ளதுடன் மிக விரைவில் அதை முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வு ஆண்டில் வருமான மதிப்பீடு ரூபா | நிதிப் பிரமாணம் 128(2) மற்றும் 2015 | மீளாய்வாண்டில் வருமான மதிப்பீடு மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | 950 மில்லியன் ஆக இருந்ததுடன் உண்மையான வருமானம் ரூபா மில்லியன் 963.8 ஆனதால் ஆரம்ப மதிப்பீட்டைக் கடந்து நிகர வருமானம் சேகரித்தல் ரூபா 13.8 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. | யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் பிழையற்ற வருமான மதிப்பீடு தயார் செய்தல், வருமான நிர்வாகத்தை வினைத்திறனுடன் செய்தல், மற்றும் அது சம்பந்தப்பட்ட திருத்தமொன்று செய்ய வேண்டியமை. | உண்மையான வருமானம் இடையிலான வேறுபாடு நூற்றுக்கு 1.3 ஆக இருந்ததுடன் அரச ஊழியர்களின் சம்பள அதிகரித்தல் மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களிலிருந்து அறவிடப்படும் வாடகை பதிவானதன் மூலம் இவ்வாறு நிகர வருமானம் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கிடையிலான வேறுபாடுகளே காரணாமாகும். |
| (ஆ) | சென்ற வருடத்திற்கு நிகராக 2108 ஆம் ஆண்டின் உண்மையான கட்டிட வாடகை வருமானம் ரூபா 51.2 மில்லியன் ஆக விருத்தி அடைந்து இருந்த போதிலும், 42 நிறுவனங்கள் சம்பந்தமாக ரூபா 258.9 மில்லியன் வருமானம்குறைந்து இருந்தமை அவதானிக்கப்பட்டது. அக்குறைவின் அளவு நூற்றுக்கு 0.86 இல் இருந்து நூற்றுக்கு 96.82 வரையிலான வீச்சாக இருந்தது. | வருமானத்தின் ஏற்றத் தாழ்வை இனங்கண்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பற்பல காரணங்களினால் வருமானத்தில் அசாதாரண ஏற்றத்தாழ்வு காணப்படுதல், விடுமுறை விடுதிகள் ஒதுக்கப்படுதல் சென்ற வருடத்திற்கு நிகராக குறைவு அடைதல் ஆகிய காரணிகளால் வருமானத்தில் வீழ்ச்சி காணப்படுகிறது. |
| (இ) | **நிலுவை வருமானம்**<br>------------------------------------ | | |
| (i) | 2017 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முழு நிலுவை வருமானம் ரூபா 188.5 மில்லியன் ஆக இருந்தது. மீளாய்வு ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி மொத்த நிலுவை வருமானம் 214.3 மில்லியன் ஆகும். இதன்படி நிலுவை வருமானம் ரூபா 25.9 மில்லியன் ஆக அதிகரித்திருந்தது. மேலும் இந்த நிலுவை வருமானத்தில் ரூபா 125.6 மில்லியன் ஆனது | நிலுவை வருமானத்தை நாளதுவரையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2018 ஆம் ஆண்டில் நிலுவை வாடகை ரூபா 25 மில்லியன் அதிகரித்திருந்ததுடன் மூன்று நிறுவனங்களிலிருந்து ரூபா 15.6 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. மிகுதி நிலுவை வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன் மிகுதியாக இருந்ததுடன் அது மொத்த நிலுவை வருமானத்தில் நூற்றுக்கு 59 சதவீதமாகும். | | |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் உணவு ஆணையாளர் திணைக்களம் மற்றும் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் நிலுவை வாடகை முறையே ரூபா 84.8 மில்லியன் மற்றும் ரூபா 59.2 மில்லியன் ஆக இருந்தன. அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டிய வாடகையினுள் உட்பட்டிருந்த ரூபா 44.8 மில்லியன் 2013 ஆம் ஆண்டிற்கு முன்னதாக கிடைக்க வேண்டியதாகும். இந்த நிலுவைப் பணத்தின் ரூபா 36 மில்லியன் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிலிருந்து அறவிடப்பட வேண்டியுள்ளதாக இருந்ததுடன் 2016 வருடம் கட்டிட பாவனையை கைவிடப்பட்ட போதிலும், நிலுவைப் பணம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | கணக்கிலுள்ள மீகுதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (iii) | ஓய்வூதிய திணைக்களத்திற்கு சொந்தமான கட்டிடங்கள், 05 அரசாங்க நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொடுத்ததில் 2009 வருடம் முதல் 2011 வருடம் வரை அறவிடமுடியாமல் இருக்கும் வாடகை ரூபா 36.6 மில்லியன் ஆகும். | நிறுவனங்களை அறிவுறுத்தி மிகுதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளமை | அந்த அரசாங்க நிறுவனங்கள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 செலவின விடயங்களுக்காக செய்து கொடுக்கப்பட்டிருந்த ரூபா 43.3 மில்லியன் ஆன ஒதுக்கீடு எவ்வித பாவனையும் செய்யப்படாது மொத்த ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் செய்து முடிப்பதற்கான வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்க வேண்டியமை. | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அமைச்சுக்கள் மறுசீராக்கியமை மற்றும் 07 விடுமுறை விடுதிகளுக்கான எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் செய்யப்படாமையினால் மொத்த தேறிய ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 22 செலவின விடயங்களுக்கான மொத்த நிகர ஒதுக்கீடு ரூபா 876.3 மில்லியன் ஆக இருந்ததுடன் பாவனை செய்யப்பட்டமை ரூபா 672.5 ஆகும். மிகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமையினால் செலவு விடயங்கள் சம்பந்தமான சேமிப்பு நூற்றுக்கு 16 இலிருந்து நூற்றுக்கு 67 வரை இடைப்பட்ட வீச்சாக இருந்தது. | இயலுமானவரை பிழையற்ற செலவின மதிப்பீடு தயாரிக்க வேண்டியமை. | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. 12 செலவின விடயங்களுக்காக திறைசேரியிலிருந்து தேவையான கட்டுநிதி கிடைக்காமையினாலும் ஏனைய 10 செலவின விடயங்களுக்காக பல்வேறு காரணங்களால் ஒதுக்கீடு பாவனை செய்யப்படாது சேமிக்கப்பட்டிருக்கின்றது. |
| (இ) | நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் 6 சந்தர்ப்பங்களின் போதும், ஒதுக்கீடுகளை மாற்றிக் கொண்டு இருந்ததுடன் அவ்வொதுக்கீட்டில் நூற்றுக்கு 52 முதல் நூற்றுக்கு 100 வரையிலான வீச்சில் ஒதுக்கீடு பாவனை செய்யப்படாது சேமிப்பில் இருந்தது. 02 சந்தர்ப்பங்களில் குறைநிரப்பு மதிப்பீட்டிலிருந்து ஒதுக்கிக் கொள்ளப்பட்ட ஒதுக்கீடு நூற்றுக்கு நூறு பாவனை செய்யப்படாது சேமிப்பில் இருந்தது. | நிதிப் பிரமாணப் படி செயல்பட வேண்டியமை. | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. 06 சந்தர்ப்பங்களில் கையளிக்கப்பட்ட ஒதுக்கீடு பாவனை செய்யாது சேமிப்பில் இருக்கின்றது. |

### 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 13 சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 216(அ) ஏற்பாடுகளுக்கு முரணாக தேறிய ஒதுக்கீட்டை கடந்து ரூபா 1,513,630 க்கு ஆன பொறுப்புக்களுக்கு உடன்பட்டு இருந்தது. | நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் படி பொறுப்புக்கள் சம்பந்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்வதுடன், இது போன்று நிலைமைகளை தவிர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.4 முற்பணம் வழங்கல் மற்றும் சரிசெய்தல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச்சுற்று நிருபத்தின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) பிரகாரம் வழங்கப்பட்ட சம்பந்தப்பட்ட அலுவலுக்கான உபகட்டு நிதி அலுவல் முடிவடைந்து 10 நாட்களுக்குள் சரிப்படுத்த வேண்டினும் 07 சந்தர்ப்பங்களின் போது சம்பந்தப்பட்ட அலுவலுக்காக வழங்கப்பட்ட உப கட்டு நிதி 07 நாள் முதல் 22 நாட்கள் வரையிலான வீச்சில் தாமதப்படுத்தப்பட்டு சரிசெய்யப்பட்டிருந்தது. | பிரமாணத்தின் படி அலுவல் முடிந்து 10 நாட்களுக்குள் முற்பண சிக்கலை தீர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டியமை. | தாமதம் ஏற்பட்டிருந்தமையும் முன்னால் இவ்வாறான தாமதங்களை தவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஒன்றிணைக்கப்பட்ட சேவை பிரிவினால் திட்டமிடப்பட்டிருந்த 07 ஆட்சேர்ப்பு மற்றும் 16 பரீட்சைகள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆட்சேர்ப்பு பரீட்சைகள் உரிய படி நடத்தப் படுவதற்கான ஏற்பாடு செய்ய வேண்டியமை | 2018 ஆம் ஆண்டிற்கான பரீட்சை செயல் திட்டத்தை தயாரிக்கும் போது உள்ளடக்கப்பட வேண்டிய பரீட்சைகள் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தை அறிவுறுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் பரீட்சைகளை உரிய காலத்தில் நடாத்த முடியாமற் போனதன் காரணமாக முகம் கொடுத்துள்ள இக்கட்டான நிலையை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. |
| (ஆ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலவிய அரச முகாமைத்துவ உதவியாளர் பதவி வெற்றிடங்கள் 6193 ஆக ஆட்சேர்ப்புக்கான வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட்டிருந்த போதிலும், 5427 அலுவலர் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்பட்டமையால் இன்னும் 766 வெற்றிடங்கள் நிரப்பப்படாது இருந்தன. இன்னும் மீளாய்வாண்டின் இறுதியில் நூலக சேவையில் 135 பதவிக்கான வெற்றிடங்கள் இருந்தன. | சம்பந்தப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் நிரப்பக்கூடியதாக இருந்த வெற்றிடங்கள் 5432 இன் 5427 இரு சுற்றில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இலங்கை அரச நூலக அலுவலகர் சேவைக்கு வரையறுக்கப்பட்ட அடிப்படையில் இன்னும் 12 வெற்றிடங்களை நிரப்புவதற்காக பெறுபேறு ஆவணங்கள் வரவழைக்கப்பட்டன. |
| (இ) | இலங்கை நிர்வாக சேவை III, II, I மற்றும் விசேட தரத்திலான 110 அலுவலகர்களுக்கும் இடமாற்றம் கொடுக்கப்படாமல் 5 வருடங்களுக்கு அதிக காலம் ஒரே இடத்தில் சேவையில் ஈடுபட்டிருந்தனர். | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாற்று நடைமுறைக் கோவை 195(vi), (vii) மற்றும் 203(v) அமைவாக செயலாற்ற வேண்டியமை. | இலங்கை நிர்வாக சேவை III, II, I மற்றும் விசேட தரத்திலான அலுவலகர்களுக்கான வருடாந்த மாற்றக் கட்டளை கொடுக்கப்பட்டிருந்த போதிலும், சேவையின் தேவை கருதி சம்பந்தப்பட்ட திணைக்கள தலைவர் ஊடாக அரச சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்வதன் மூலம் அவ் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்று தொடர்ந்தும் அவ்விடத்திலேயே சேவை புரிகின்றனர். |
| (ஈ) | இலங்கை கணக்காளர் சேவை III, II, I மற்றும் விசேட தரத்திலான 482 அலுவலகர்களுக்கு இடமாற்றம் பெற்றுக் | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாற்று நடைமுறைக் கோவை 195(vi), | 2018 யூன் 30 ஆந் திகதிக்கு 473 வெற்றிடங்கள் நிலவியமையும் பாரிய எண்ணிக்கையிலான அலுவலகர் நிரந்தர சேவா இடத்திற்கு மேலதிகமாக பதில் |

| | | | |
|---|---|---|---|
| | கொடுக்கப்படாது 5 வருடங்களுக்கு அதிக காலம் ஒரே இடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதில் 30 அலுவலகர்களுக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுக்கப்பட்டு மீண்டும் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | (vii) மற்றும் 203(v) அமைவாக செயலாற்ற வேண்டியமை | கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருந்தமையும் 5 வருடம் பூர்த்தி செய்யப்பட்ட சகல அலுவகர்களையும் இடமாற்றம் செய்வதில் சிக்கல் ஏற்பட்டது. அதே போன்று சம்பந்தப்பட்ட நிறுவன தலைவர்களினதும் அமைச்சு செயலாளர்களினதும் பரிந்துரைகளை கவனத்திற் கொண்டு இடமாற்றம் கொடுக்கப்பட்ட கிட்டத்தட்ட 30 எண்ணிக்கையிலானவர்களின் இடமாற்றங்கள் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன. |
| (உ) | இலங்கை பொறியியலாளர் சேவை III, ஆம் வகுப்பிலான 148 அலுவலகர் மற்றும் II ஆம் வகுப்பிலான 148 அலுவலகர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அலுவகர் 14 பேருக்கு மாத்திரம் பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட் படி காரியங்களை செய்ய வேண்டியமை. | தகுதியினை பூர்த்தி செய்யப்பட்ட அலுவலகர்களுக்கு மாத்திரம் பதவி உயர்வு வழங்குதல் செய்யப்படும். |
| (ஊ) | இலங்கை திட்டமிடல் சேவையின் புது அலுவலகர் 133 பேர் சேர்த்துக் கொள்ளப்படல், 2015 குழுவை சேவையில் நிரந்தரமாக்கல் மற்றும் 2008 குழுவை 11 ஆம் வகுப்புக்கு தரம் உயர்த்தல் ஆகிய விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை. | - மேற்படி - | புதிதாக அலுவலகர்களை சேர்த்துக் கொள்வதற்கான பரீட்சை பெறுபேறுகள் 2018 ஆம் வருடம் வழங்கப்படாமையினால் எதிர்பார்க்கப்பட்ட வகையில் புதிதாக அலுவலகர் சேர்த்துக்கொள்ளும் அலுவல்களை முடிப்பதற்கு முடியாமல் போயிற்று III ஆம் தரத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட அலுவலகர்களினது சேவையை ஸ்தீரப்படுத்துவதற்கான உரிய முறையில் சமரப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மாத்திரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அவ்வருடத்திற்குள்ளேயே சமர்ப்பிக்கப்பட்டன. |

**3.2 திட்டங்களை பூர்த்தி செய்வதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ‘‘நில பியச’’ திட்டங்கள் | | |
| (i) | மொனறாகலை திட்டத்தில் 2018 ஆம் ஆண்டு இறுதியில் நூற்றுக்கு 60.8 பௌதீக முன்னேற்றத்தை திட்டமிடப்பட்டு இருந்த போதிலும், அடையப்பட்ட முன்னேற்றமானது நூற்றுக்கு 44 ஆகும். | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டுக்கு அமைவாக இலக்கை அடைவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | திட்டத்தின் ஆரம்ப கட்ட காலத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக ஒரு குறிப்பிட்ட காலம் வரை இத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. |
| (ii) | கம்பஹ திட்டத்தில் 2018 ஆம் ஆண்டு இறுதியில் நூற்றுக்கு 65 செய்து முடிப்பதற்கு திட்டமிடப்பட்டு இருந்ததுடன் அதில் நூற்றுக்கு 42.25 மட்டும் அடையப்பட்டிருந்தது. | - மேற்படி - | திட்ட ஆரம்பத்தின் போது எல்லை சம்பந்தமான சச்சரவொன்றும் மற்றும் நிர்மாண ஒப்பந்தக்காரரின் நிதி மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமான பல உள்ளக பணிகள் குறிப்பிடத்தக்க கால அளவு ஸ்தம்பிதம் ஏற்பட்டது. செயலாளருடன் நடாத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களில் அறிவுறுத்தல்கள் செய்யப்பட்டதுடன் அதன்படி தற்போது அதில் Phase 1 இன் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 90 ஆக உள்ளது. |
| (iii) | கண்டி திட்டத்தில் 2018 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட ஒப்பந்த வேலைகளில் நூற்றுக்கு 15 மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு இருந்ததுடன் அதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 25 மில்லியன் ஆன ஒதுக்கீடு முழுமையாக பாவனை செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | பிரேரிக்கப்பட்ட பூமியில் உள்ள பழைய கட்டிடங்களை உடைத்து அப்புறப்படுத்தவும் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் கட்டிடத்தின் கட்டமைப்பை மாற்றுவதற்கான காரியங்களுக்கு காலம் கழிந்துள்ளமையால் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டது. ஒப்பந்தக்காரரின் செயலாற்று திறனும் தற்போது திருப்திகரமான மட்டத்தில் இல்லாமையால் ஒப்பந்தக்காரர் மற்றும் ஆலோசனை சேவை வழங்கும் நிறுவனத்திடமிருந்து அது குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை சம்பந்தமாக ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| (iv) பொலன்னறுவ திட்டத்தில் 2018 ஆம் ஆண்டு இறுதியில் முழுமையாக செய்து முடிக்க திட்டமிடப்பட்டு இருந்ததுடன் அதில் நூற்றுக்கு 09 மாத்திரம் முடிக்கப்பட்டிருந்தது. அது போன்றே 2018 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட ஒப்பந்த வேலைகளில் நூற்றுக்கு 05 மாத்திரம் செய்து முடிப்பதற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 67.7 மில்லியன் பணம் முழுமையாக பாவனை செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | • பிரேரிக்கப்பட்ட பூமியில் உள்ள கட்டிடங்களை உடைத்து அப்புறப்படுத்துவதற்கு உரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக 06 மாத காலம் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.<br>• போதிய மட்டத்திலான சீரான பௌதீக முன்னேற்றமொன்றை காண்பிப்பதற்கு இயலாது போனமையால் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தத்தை (Termination of Contractor) 2019.03.21 ஆந் திகதி இடைநிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி ஆலோசனை நிறுவனத்தின் ஆலோசனைப் படி புது ஒப்பந்தக்காரரொருவரை தேர்ந்தெடுப்பதற்காக பெறுகை அலுவல்கள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 3.3 நட்டங்களும் இழப்புக்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு இறுதியில் ஏட்டிலிருந்து தள்ளுபடி செய்யப்படாத நட்டங்களின் பெறுமதி ரூபா 2.1 மில்லியன் ஆக இருந்ததுடன் மேலும் முன்னெடுக்கப்பட வேண்டிய மிகுதி ரூபா 1.5 மில்லியன் ஆக இருந்தது. | நிதிப் பிரமாணம் 109 அமைவாக ஏட்டிலிருந்து தள்ளுபடி செய்தல் மற்றும் அறவிடப் படுவதற்கான துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டியமை | நட்டங்கள் மற்றும் இழப்புக்களை தள்ளுபடி செய்தலும் அறவிடப்படுதலும் மொத்த மிகுதியாகிய ரூபா 1,267,643 ஐ அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வாகன விபத்துக்களுக்கான ஆவணங்களின் அலுவல்கள் துரிதமாக செய்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஆ) 23A சம்மேளன மனை எரிந்து பாரிய இழப்புக்களுக்கு உள்ளாகி இருந்த போதிலும் ஏற்பட்டிருந்த | நிதிப்பிரமாணம் 103(1) மற்றும் 104(1) பிரகாரம் சேதங்கள் இழப்புக்கள் | 2018.06.04 ஆந் திகதி திடீர்த் தீ பிடித்தலில் நஷ்டஈடு குறித்து திம்பிரிகஸ்யாய பிரதேச செயலக தொழில்நுட்ப அலுவலகரால் கணக்கீடு |

| | | |
|---|---|---|
| சேதங்களையும் இழப்புக்களையும் கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | செய்யப்பட்ட சேதம் சம்பந்தமான அறிக்கைக்கு அமைவாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியத்தருகின்றேன். |

**4. நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கெல்லைகளை அடைந்து கொள்ளுதல்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிரந்தர அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரல் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனமும் செயலாற்ற வேண்டி உள்ளதுடன் மீளாய்வு ஆண்டிற்கு அமைவாக அமைச்சினால் தமது விடய நோக்கின் கீழ் வரும் கருமங்கள் சம்பந்தமாக எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது பற்றி அறிவுறுத்தப்பட்டு இல்லாது இருந்தனர். | நிரந்தர அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 வருட நிகழ்ச்சி நிரல் பிரகாரம் செயல் பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**5. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கான பணிக் குழாம் 1670 ஆக இருந்ததுடன் அதில் 360 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |